


# நீதிக்காக முன்வருவோம்...!

**2005 ம் ஆண்டின் 04 ம் இலக்க குற்றத்தினால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டம்.**

# நேர்மையின் புகலிடம்

ஊழலை தடுப்பதற்கான சட்ட ஆலோசனை

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

# நீதியை நிலைநிறுத்த முன்வந்தமைக்காக தீங்கிழைக்கப்படுவீர்கள் என பயப்படுகிறீர்களா?

# குற்றத்தினால் பாதிக்கப்பட்டவரா? அல்லது அந்த குற்றத்தின் சாட்சியா நீங்கள்?


2005 ம் ஆண்டின் 04 ம் இலக்க குற்றத்தினால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் உதவிகளை பெற முடியும்

## நீங்கள் எதிர்நோக்கக்கூடிய சவால்கள் என்ன?

- உங்களதும் உங்களது குடும்பத்தினருக்கும் எதிராக ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள் , துன்புறுத்தல்கள் , மிரட்டல்கள் மற்றும் பழிவாங்கல்கள்.
- முறையான மருத்துவ சிகிச்சை மற்றும் போதிய பராமரிப்பின்மை.
- சமூக புறக்கணிப்பும், உளவியல் ரீதியான உதவியின்மையும்.
- உங்களதும் உங்களது குடும்பத்தினருக்கும் ஏற்பட்ட. பாதிப்பிலிருந்து விடுபடுவதற்கான உடனடி நிதி நிவாரண பற்றாக்குறை.

## ஏன் இந்த சட்டம் இயற்றப்பட்டது?

இந்த சட்டம் இயற்றப்படும் வரை இலங்கையில் குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை பாதுகாக்கவென ஓர் வினைத்திறனான பாதுகாப்பு முறைமை இருக்கவில்லை. இந்தச்சட்டத்தின் மூலம் வினைத்திறனான நீதி முறைமையொன்றுக்கு அத்தியாவசியமான குற்றத்தினால் பாதிக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் உள்ள உரிமைகளும் உரித்துடைமைகளும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.



03

இச்சட்டத்தின் படி,

# நீங்கள் குற்றத்தினால் பாதிக்கப்பட்டவரா?

- குற்றம், எதேச்சாதிகாரமான கைது அல்லது தடுப்பு காரணமாக உடல், உள, உணர்வு மற்றும் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டிருப்பின்

- குற்றத்தை தடுக்கும் முகமாக அல்லது பாதிக்கப்பட்டவருக்கு உதவி செய்து தலையிட்டு அதன் காரணமாக பாதிக்கப்பட்டிருப்பின்

## ஆம்
## மேலும்

- பாதிக்கப்பட்டவர் ஒரு குழந்தையாயின் அந்த குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள்.

- பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவரின் கீழ் தங்கி வாழ்வோர்.

- பாதிக்கப்பட்டவருக்கு வேண்டப்பட்டவர் என குறிப்பிட்டு சொல்லக்கூடிய எந்தவொரு நபரும்.



05

# நீங்கள் ஒரு சாட்சியா?

- ஏதேனும் அடிப்படை உரிமை, மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அல்லது ஏதேனும் குற்றம் தொடர்பில் முறைப்பாட்டினை தாக்கல் செய்த எந்தவொரு நபரும்.
- ஏதேனும் அடிப்படை உரிமை, மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அல்லது ஏதேனும் குற்றம் தொடர்பில் சட்டத்தை அமுல்படுத்துகின்ற நிறுவனங்களுக்கு புலனாய்வின் போது ஏதேனும் வாக்கு மூலங்களை அல்லது தகவல்களை வழங்கிய எந்தவொரு நபரும்.
- சட்ட நடவடிக்கையின் போது குற்றத்தினால் பாதிக்கப்பட்டவருக்கு அல்லது முறைப்பாட்டாளருக்கு உதவி செய்வதற்காக வேண்டி ஏதேனும் வாக்குமூலம் அல்லது சத்தியக்கூற்றை வழங்கிய எந்த ஓர் நபரும்.
- ஓர் ஆணைக்குழுவிற்கு ஏதேனும் தகவல்களை வழங்கிய எந்த ஓர் நபரும்.
- ஓர் நீதிமன்றத்தினால் அல்லது ஆணைக்குழுவினால் அழைப்பாணை சேர்ப்பிக்கப்பட்ட எந்த ஓர் நபரும்.

## சாட்சியாக கருதப்படுவர். மேலும்

- ஏதேனும் அடிப்படை உரிமை, மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அல்லது ஏதேனும் குற்றம் தொடர்பில் புலனாய்வில் ஈடுபட்ட ஓர் பகிரங்க அலுவலர்.
- குற்றத்தினால் பாதிக்கப்பட்ட ஒருவர்.
- ஒரு குழந்தை சாட்சி
- சாட்சியின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சாட்சியில் தங்கி வாழ்வோர்.
- சாட்சிக்கு வேண்டப்பட்டவர் என குறிப்பிட்டு சொல்லப்படக்கூடிய எந்த ஓர் நபரும்.
- நிபுணத்துவ சாட்சி.
- எதிராளி தரப்பு சாட்சி

## போன்றோரும் இதில் அடங்குவர்



07

# நீங்கள் முறைகேடுகளை வெளிச்சத்திற்கு கொண்டு வருபவரா?

தொழில் புரியும் நிலையத்தில் இடம்பெற்ற குற்றம், மனித உரிமை மீறல் அல்லது அடிப்படை உரிமை மீறல் தொடர்பில் ஆணைக்குழுவிற்கு நீதிமன்றத்திற்கு அல்லது சட்டத்தினை அமுல்படுத்தக்கூடிய நிறுவனத்திற்கு ஏதேனும் தகவல்களை, முறைப்பாட்டை அல்லது வாக்குமூலத்தை வழங்கியதன் காரணமாக

- உடல், உள ரீதியாக அல்லது உள ரீதியாக துன்புறுத்தல், அச்சுறுத்தல், கட்டாயப்படுத்தப்படல், வன்முறைக்குள்ளாக்கப்படல் போன்றவற்றை எதிர்நோக்குதல் அல்லது

- தொழில் ரீதியாக இடமாற்றங்கள் மற்றும் துன்புறுத்தல்களை எதிர்நோக்குதல்.

# குற்றத்தினால் பாதிக்கப்பட்ட ஒருநபராக உங்களுக்கு உள்ள உரிமைகள் என்ன? (பிரிவு - 03)

● நியாயமாகவும், சமத்துவமாகவும், மரியாதையுடனும் அதே நேரம் இரகசியத்தன்மையுடனும் நடத்தப்படுத்தற்கான உரிமை.

● பொருத்தமானதும் நீதியானதுமான நிவாரணங்களை உடனடியாக பெறுவதற்கான உரிமை

● தீங்கு மற்றும் ஆபத்துக்களில் இருந்து பாதுகாக்கப்படுவதற்கான உரிமை

● உடல் மற்றும் உளவியல் ரீதியாக பாதிக்கப்படுகின்ற போது மருத்துவ சிகிச்சையளிக்கப்படுவதற்கான உரிமை

● நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற புலனாய்வின் முன்னேற்றம் தொடர்பாகவும் இருக்கின்ற உதவிகள் மற்றும் நிவாரணங்கள் தொடர்பில் தெரிந்துகொள்வதற்கான உரிமை.

● முறைப்பாட்டை முன்வைப்பதற்கும் அதனை புலனாய்வுக்குற்படுத்தப்படுவதற்குமான உரிமை

● புலனாய்வு மற்றும் விசாரணைகளின் போது சட்டத்தரணியின் ஊடாக தோன்றுவதற்கான உரிமை.

● குறிப்பிட்ட அறிக்கையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியினை பெறுவதற்கான உரிமை. உதாரணமாக அரசாங்க பகுப்பாய்வாளர் அறிக்கை.

● நீதிமுறையான அல்லது நீதிமுறையற்ற நடவடிக்கையில் பங்குபற்றுவதற்கும் அவற்றின் முன்னாள் தோன்றுவதற்கும் தேவையான ஏதேனும் உதவிகள் மற்றும் தகவல்களை பெறுவதற்கான உரிமை.

## குற்றத்தினால் பாதிக்கப்பட்ட ஒருநபராக உங்களுக்கு உள்ள உரித்துடைமைகள் என்ன? பிரிவு - 04

● குற்றத்தின் காரணமாகவும் நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு ஒன்றில் பங்குபற்றியதன் காரணமாகவும் உங்களுக்கு ஏற்பட்ட செலவுகளை ஈடு செய்ய பணத்தை பெறுவதற்கு

● உளதாயுள்ள வளங்களை பொறுத்து அரசிடமிருந்து வைத்திய சேவையை பெற,

● தேவையான வைத்திய சிகிச்சையை பெற குற்றத்தினால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளுக்கான பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபையிடம் நிதி உதிவியை கோருவதற்கு



## ஒரு சாட்சியாக உங்களுக்குள்ள உரித்துடைமைகள் என்ன? (பிரிவு 5)

- நீதியாகவும், கௌரவமாகவும், மரியாதையாகவும் நடாத்தப்படுவதற்கும் இரகசியத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும்.

- தீங்கு, அச்சுறுத்தல், மிரட்டுதல் மற்றும் பழிவாங்குதல் போன்ற செயற்பாடுகளில் இருந்து பாதுகாக்கப்படுவதற்கும்.




# பிரிவு - 22 எவ்வகையான பாதுகாப்பு மற்றும் உதவிகளை பெறக்கூடியதாக இருக்கும்*

- உங்களதும் உங்களது ஆதனங்களினதும் பாதுகாப்பு
- தற்காலிக தங்குமிடங்கள்
- நிரந்தரமான மாற்று இடம்
- தற்காலிக மற்றும் நிரந்தரமான வேலைவாய்ப்புக்கள்
- மீள அடையாளப்படுத்துதல்
- தேவையான வேறு ஏதேனும் அத்தியாவசியமான நடவடிக்கைகள்

எனவே இவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகளானது

- குற்றவியல் புலனாய்வின் போதும் அப் புலனாய்வின் பின்னரும் மற்றும்
- ஆணைக்குழுக்களின் விசாரணைகளின் போதும் அதன் முன்னரும், பின்னரும் கூட வழங்கப்படலாம்.
- நீதிமுறை நடவடிக்கைகளின் போதும் அதன் முன்னரும், பின்னரும் கூட வழங்கப்படலாம்.

* இவ்வாறான உதவிகள் மற்றும் பாதுகாப்பை வழங்குவது என்பது இருக்கின்ற வளங்களின் தன்மையில் தான் தங்கியுள்ளது.



# பாதிக்கப்பட்டோர் அல்லது ஒரு சாட்சி யாரிடம் தனது பாதுகாப்பிற்கான கோரிக்கையை முன்வைக்க முடியும்? (பிரிவு -21)

- குற்றத்தினால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளை பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபையிடம்

- இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் காணப்படுகின்ற குற்றத்தினால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளுக்கு பாதுகாப்பு மற்றும் உதவிகள் வழங்குவதற்கான பிரிவில்

- வழக்கு இடம்பெற்றுக்கொண்டிருக்கும், முடிவுற்றிருக்கும் அல்லது எடுக்கப்படவிருக்கும் நீதிமன்றத்தில்

- லஞ்சம் ஊழலுக்கு எதிரான முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு, ஏதேனும் ஒரு ஆணைக்குழு, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக்குழு

- எந்த ஓர் பொலிஸ் நிலையத்தினதும் பொலிஸ் நிலையபொறுப்பதிகாரியிடம்.

## ஏதேனும் நஷ்டஈட்டை கோருவதற்கு உரித்துடையவரா நீங்கள்? (பிரிவு 30)

- உடல் மற்றும் உளவியல் ரீதியாக காயத்திற்குள்ளாகின்ற சந்தர்ப்பத்திலும் தனது சொத்திற்கு ஏதேனும் சேதம் அல்லது இழப்பு நிகழ்கின்ற சந்தர்ப்பத்திலும்,
- புனர்நிர்மாணம் செய்வதற்கும், உளவள ஆலோசனை மற்றும் மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கும் பணம் தேவைப்படுகின்ற போதும்
- குற்றத்தினால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளை பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபையிடமிருந்து நீங்கள் நஷ்டஈட்டை கோரலாம்.

## மறந்து விடாதீர்கள்

கீழ் ஒவ்வொரு நீதவான் நீதிமன்றமும் அல்லது மேல் நீதிமன்றமும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட நபர் ஒரு மில்லியன் ரூபாய் வரை நட்டஈடாக, குறித்த குற்றத்தினால் பாதிக்கப்பட்டவருக்கு செலுத்த வேண்டும் என கட்டளை பிறப்பிக்க முடியும். (பிரிவு- 28ன்)

## நீங்கள் நீதியை நாடும் போது அல்லது நிலைநிறுத்த உதவ முற்பட்ட போது யாரேனும் இடையூறு செய்ய முற்பட்டார்களா?



உங்களுக்கு அல்லது உங்களுக்கு அக்கறையுள்ள நபரை காயமேற்படுத்துவதாக அச்சுறுத்துதல்

(இது ஆதனத்திற்கு நற்பெயருக்கு ஏற்படுத்தப்படும் களங்கத்தையும் உள்ளடக்கும்)

எடுத்துக்காட்டாக

- உங்களுக்கோ ஆதனங்களுக்கோ சேதத்தை விளைவிப்பதன் ஊடாகவோ

- உங்களது வதிவிடத்தில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்ற முயற்சித்தல்

- உங்களது தனிப்பட்ட தகவல்களை பரிமாறல் மற்றும் பிரசுரித்தல் மூலமாக தனிப்பட்ட வாழ்க்கையில் பாரிய அபாயத்தை உண்டுபண்ணுதல்

- குற்றம் புரிந்த நபர் அதனை மறைப்பதற்காக வேண்டி ஏதேனும் சன்மானங்களை வழங்குதல் போன்ற செயற்பாடுகளை ஏதேனும் நபர் புரிவதன் மூலமாக குற்றத்தினால் பாதிக்கப்பட்ட நபரையோ அல்லது சாட்சியையோ, குற்றவியல் நீதிமுறை செயற்பாட்டில் தலையிடுவதிலிருந்து தடுப்பதற்கு முயற்சி செய்வாராயின்

அவ்வாறு முயற்சி செய்கின்ற நபர் பிரிவு-08ன் கீழ் மறியல் மற்றும் தண்டப்பணத்தினால் தண்டிக்கப்பபடக் கூடிய குற்றம் புரிந்தவராக கருதப்பட்டு தண்டிக்கப்படுவார்.



# தொடர்புகளுக்கு

**குற்றச்செயல்களால் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு பிரிவு**

தொலைபேசி இல: 011-2326314

விலாசம்: இல: 09, மிஹிந்து மாவத்தை, கொழும்பு - 12

**குற்றச்செயல்களால் பாலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபை**

தொலைபேசி இல: 011-2866452

விலாசம்: 1ம் மாடி, 428/11, A, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை

## நேர்மையின் புகலிடம்

ஊழலை தடுப்பதற்கான சட்ட ஆலோசனை

**ஊழலை தடுப்பதற்கான சட்ட ஆலோசனை**

**டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா**

**இல: 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு - 05**

**தொலைபேசி இல: 011 2 501 503**